22 | T | I&II

# "GEO" Published

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination – 2020

# முன்னோடிப் பரீட்சை –01 –2020

புவியியல் - I
Geography - I

*Teacher:-*
*M.Sujinthan, BA(Hons) Spl.Geo*

மூன்று மணித்தியாலங்கள்
Three Hours

**01.** தேசப்படங்களில் நிர்வாக எல்லைகளை வரையும்போது பின்வருவனவற்றுள் எவை கவனத்தில் கொள்ளப்படுகின்றது?
1) மலை உச்சிகள், நதிகள்
2) வீழ்ச்சிகள், மேட்டு நிலங்கள்
3) பள்ளத்தாக்குகள், சுவடுகள்
4) காடுகள், புதர்க் காடுகள்
5) பிரதான வீதிகள், பிற வீதிகள்

**02.** இரண்டு மலைத் தொடர்களிற்கிடையில் தாழ்ந்த பகுதியினூடாக நீர்பாய்ந்துசெல்லும்போது எவ்வாறு அழைப்பார்?
1)கணவாய் 2)பள்ளத்தாகது 3)உயர் கணவாய் 4)தாழ் கணவாய் 5)நீர்க் கணவாய்

**03.** சம கணியப்படங்களினால் சிறப்பாக எடுத்துக்காட்டக்கூடிய பவியியல் அம்சங்கள் பின்வருவனவற்றுள்?
1) நிலப்பயன்பாடு மற்றும் குடித்தொகை அடர்த்தி
2) நெல்வயல்கள் மற்றும் மண்வகைகள்
3) பெருந்தோட்டப்பயிர்கள் மற்றும் வனப்பகுதிகள்
4) மழைவீழ்ச்சி மற்றும் நில ஏற்றம்
5) குடியிருப்புக்கள் மற்றும் வீதிகள்

**04.** முதனிலைத்தரவுகளின் மூன்று மூலாதாரங்களைத் தரும் விடை எது?
1) செய்மதிப்படிமங்கள், வினாக்கொத்துக்கள், இடவிளக்கப்படங்கள்
2) நூலக மூலாதாரங்கள், இணையம், கலந்துரையாடல்
3) வினாக்கொத்துக்கள், கலந்துரையாடல்கள், அவதானிப்புக்கள்
4) அவதானிப்புக்கள், செய்மதிப்ப படிமங்கள், வங்கி அறிக்கை
5) நில அளவைகள், விமான ஏணிப்படங்கள், நூலா மூலாதாரங்கள்

**05.** பின்னகத் தரவுகளுடன் தொடர்புட்ட மூன்று மாறிகளைச் சரியாகக் காட்டும் விடை எது?
1) சுற்றுலாப் பயணிகளின் வருகை, ஏரிகள் மற்றும் குடும்பத்திலுள்ள பிள்ளைகள்
2) உயரம், நிலப்பயன்பாடு மற்றும் தூரம்
3) படிவு வீழ்ச்சி, உயர்ச்சி மற்றும் மண் ஈர்ப்பதன்
4) நறை, நிலப்பயன்பாடு மற்றும் ஆவியக்கம்
5) மண் ஈரப்பதன், ஆவியாக்கம், மற்றும் நேரம்

M.SUJINTHAN

**06.** தொலையுணர்வு **(RS)** நுட்பங்களின் மூலம் பெறப்படும் தகவலகள் முன்வைக்கப்படும் மூன்று பிரதான வழிகளாவன?

1) கருப்பொருள் படங்கள், இடவிளக்கப்படங்கள், இலக்கு முறைப்படங்கள்
2) குத்தான ஒளிப்படங்கள், இடையான ஒளிப்படங்கள், செய்மதிப்படிமங்கள்
3) 3D படங்கள், கருப்படங்கள், ஒத்திசைவுப்படங்கள்
4) விமான ஒளிப்படங்கள், செய்மதிப்படிமங்கள், பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையிலிருந்து பெறப்படும் படங்கள் (GPS)
5) இலக்க முறைமைப்படங்கள், GPS படங்கள், கிடையான ஒளிப்படங்கள்

**07.** சமுத்திர அவதானிப்புக்களை மேற்கொள்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள சமுத்திர அவதானிப்புச் செய்மதிகளின் தொகுதி?

1) INSAT, IRS, SPOT
2) NIMBUS, MOS, SEAWIFS
3) TIROS, GEOS, GMS
4) NOAA, MOS, IRS
5) METEOSAT, SPOT, GMS

**08.** புவியியல் தகவல் முறைமைத் தொழில்நுட்பத்தை மாத்திரம் பயன்படுத்தி அமைக்கப்படும் படத்தின் வகையானது?

1) எண்ணிலக்கப்படங்கள்
2) கைவரைப்படங்கள்
3) ஒத்திசைவுப்படங்கள் (analogue)
4) அச்சிடப்பட்ட படங்கள்
5) முப்பரிமாணப்படங்கள் 3D படங்கள்

**09.** மாறிகளின் எண்ணிக்கை ரீதியிலான பெறுமதியை இலகுவாக அறிந்துகொள்ள கூடியதான வரைபு யாது?

1)கோட்டுபார் 2)பல்பார் 3)பிரிக்கப்பட்ட வட்டங்கள் 4)கோட்டு நிரல்பார் 5)இரட்டைபார்

**10.** பின்வரும் வகைகளுள் திரட்டும் பிறவையும் வகுப்பு ஆயிடையையும் ஒரே தடவையில் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான வரைபு எது?

1) கூட்டு கோட்டு வரைபு
2) இழை வரையம்
3) ஓக்கி வரைபு
4) மீடிறன் பல்கோணி
5) சதவீத கூட்டு பார்வை வரைபு

**11.** பின் வருவனவற்றுள் மூன்றாம் ஒழுங்கு நிலவுருவங்களின் தெரிவு

1) கண்டச்சாய்வுகள் 2) எரிமலைகள் 3) ஆறுகள் 4) சமுத்திரங்கள் 5) தீவுகள்

**12.** தனித்தொகுதிக்கு உதாரணமாய் அமைவது?

1) ஞாயிற்றுத்தொகுதி 2) ஆற்றுத்தொகுதி 3) உயிர்த்தொகுதி
4) புவித்தொகுதி 5) சூழல் தொகுதி

M.SUJINTHAN

**13.** ஒரே மாதிரியான பரிணாம நிலையையும் ஒரேயளவான வாழ்க்கைக் கோலத்தையும் கொண்ட தாவர மற்றும் விலங்ககளின் பிராந்திய சமூகம் என்பது?

1)சூழற்தொகுதி 2)உயிர்ப்பெருந்திணிவு 3)சாகியம் 4)உணவு வலை 5)கற்கோளம்

**14.** புவியில் காணப்படும் மொத்த நீரின் அளவு யாது?

1)1567 மில்லியன் கன கிலோ மீற்றர் 2)1200 மில்லியன் கன கிலோமீற்றர்

3)1750 மில்லியன் கன கிலோமீற்றர் 4) 1360 மில்லியன் கன கிலோமீற்றர்

5) 1830 மில்லியன் கன கிலோமீற்றர்

**15.** உயிர்க் கோளத்தின் மூலப்பொருட்களிடையே பிரதான நான்கு மூலக்கூறுகளை சரியாகக் கொண்டுள்ள விடைத் தொகுதி

1)ஐதரசன், காபன், ஓட்சிசன், நைதரசன் 2)சல்பைட்டு, பொஸ்பரசு, மக்னீசியம்

4)நைதரசன், ஐதரசன், சல்பைட்டு, பொட்டாசியம் 3)செம்பு, வெள்ளி, நாகம், தங்கம்

5)கந்தகம், அமோனியா, சல்பேட்டு, ஆகன்

**16.** புவியின் முழு அடர்த்தி யாது?

1) 2.8g/$Cm^3$ 2)4.4 g/$Cm^3$ 3)2.2 g/$Cm^3$ 4)5.5 g/$Cm^3$ 5)10 g/$Cm^3$

**17.** உலகில் மிக உயரத்தில் அமைந்த ஏரி?

1. தங்கனிக்கா ஏரி 2. விக்ரோரியா ஏரி 3. தித்திக்கா ஏரி
4. பைக்கால் ஏரி 5. சுப்பீரியர் ஏரி

**18.** வளிமண்டலப் **"பொதுச் சுற்றோட்டத்திற்குப்"** பொறுப்பான பிரதான காரணி யாது?

1) நிலத்திற்கும் கடலுக்கும் இடையில் அமுக்கச் சாய்வு விசையில் காணப்படும் வேறுபாடு

2) அகலக் கோடுகளுக்கு மேலாகக் காணப்படும் தாழ் மற்றும் உயரமுக்க வலயங்கள்

3) வெவ்வேறு அகலக் கோடுகளில் காணப்படும் கொரியோலிஸ் விசையின் மாறுதன்மை

4) முனைவு ஒருங்கல் வலையத்தின் மாறுதன்மை

5) வெவ்வேறு அகலக் கோடுகளில் இடம்பெறும் மையநாட்ட விசை

**19.** அவுஸ்திரேலியாவின் வடகிழக்குக் கரைக்கு அப்பால் தோன்றும் அயனப் புயல் எப்பெயரினால் அழைக்கப்படும்?

1) ஹரிக்கேன் 03) வில்லி வில்லிஸ் 04) சூறாவளி

2)தைபூன் 05) பாகியாஸ்

**20.** சிறிய தகடுகளில் ஒன்றாகிய சோமாலியத் தகட்டுடன் இணைந்துள்ள சமுத்திரம் எது?

1) பசுபிக் 2) இந்து 3) அத்திலாந்திக் 4) ஆர்டிக் 5) அந்தாட்டிக்

**21.** பின்வரும் நிலவுருவச் சோடிகளுள் எச்சோடி வெள்ளப் பெருக்குச் சமவெளியில் பொதுவாகக் காணப்படுகின்றது

1) பின்னடர்ச் சேறும், பனியெருத்தேரியும்
2) பனியெருத்தேரியும், நீண்ட மணற் குன்றும்
3) பனிக்கட்டியாற்றுப் படிவும், பின்னடர்ச் சேறும்
4) உறிஞ்சு தொளையும், தீவுக் குன்றும்
5) பின்னடர் சேறும், தெம்போலாவும்

M.SUJINTHAN

**22.** புவி மேற்பரபப்பில் வெப்பநிலை அதிகரித்த காலப்பகதியாக கண்டறியப்பட்டுள்ள காலப்பகுதி?

1)1850 – 1900  2) 1906 – 2005  3)2000-2019  4) 1950 – 2000  5) 1995 - 2006

**23.** உலகில் காணப்படும் பிரதான ஆற்று வடிநிலங்களின் எண்ணிக்கை?

1)230  2) 242  3) 258  4)260  5) 259

**24.** 'ஹெக்லா'' எரிமலை அமைந்துள்ள தீவு

1) ஜிப்றால்டர்  2) சிசிலி  3) தஸ்மேனியா 4) ஐஸ்லாந்து 5)தியாரா – டெடியூகோ

**25.** சிறந்த களிப்படிவு காணப்படும் பிரதேசம் எது?

1) தெதியவல  2) பொரலஸ்கமுவை

3) மீட்டியா கொட  4) நிலாவெளி

5) சேருவில

**26.** உலக காட்டுயிரின் நிதியம் **(WWF)** நிறுவப்பட்டது?

1) அச்சுறுத்தப்படும் உயிரினங்களைப் பாதுகாக்க நிதி சேர்ப்பதற்கு

2) மிருகக்காட்சிச் சாலைகளை விரிவாக்கம் செய்ய நிதி சேகரிப்பதற்கு

3) மூன்றாம் உலகத்தில் தாவரங்களையும், விலங்கினங்களையும் பாதுகாக்கநிதி சேகரிப்பதற்கு

4) பயங்கரமான மிருகங்களை ஒழிப்பதற்கு நிதி சேர்ப்பதற்கு

5) மீள்காடாக்கல் செயற்பாட்டை மேற்கொள்ளல்

**27.** மண் துணிக்கைகளில் இருந்து பிரிக்க முடியாதவாறு மெல்லிய வலயமாக இணைந்திருக்கும் நீர் எவ்வாறு அழைக்கப்படும்?

1) ஈரப்பசை நீர்  2) ஈர்ப்புநீர்  3) மயிர்த்துழை நீர்

4) தரைக்கீழ் நீர்  5) கழுவு நீர்

**28.** பின்வரும் மண் வகைகளில் ஈர வலயத்திற்குரிய மண் வகைகளாவன?

1) செங்கபில நிறமண், செங்கபில லெற்றசோல் மண்

2) கபில மண், வண்டல் மண்

3) செங்கபில லெற்றசோல் மண், செம்மஞ்சள் பொட்சோல் மண்

4) கிரமு சோல், செங்கபில நிறமண்

5) செங்கபில லெற்றசோல் மண், ரேகா சோல்ஸ் மண்

**29.** இலங்கையில் 2041 இல் 60 வயதுக்கு மேற்பட்டோர் காணப்படும் வீதம் எவ்வளவு என எதிர்வு கூறப்பட்டுள்ளது?

1) 6.6  2) 9.2  3) 12.4  4) 24.8  5) 18.4

**30.** உயிரினப்பல்வகைமைத்தினம் கொண்டாடப்படுவத எப்போது?

1) யூலை - 09  2) மார்ச் - 17  3)நவம்பர் - 03

4) ஏப்பிரல் - 22  5) மே – 22

M.SUJINTHAN

**31.** இலங்கையில் மேல் மாகாணத்தை அடுத்து உயர் நகராக்கத்தை கொண்ட மாகாணங்கள்?

1) ஊவா, தென் மாகாணம் 2) வடமேல், வடமத்திய மாகாணம்

3) வடக்கு, கிழக்கு மாகாணம் 4) வடமத்திய, கிழக்கு மாகாணம்

5) தெற்கு, வடக்கு மாகாணம்

**32.** கலப்பாக்க விதையினமான நொரின் - 10 இனத்தின் பண்புகள் அல்லாதது?

1) கடுங்காற்றுக்கு ஈடு கொடுத்தல்

2) களைகளுக்கு தாக்குபிடித்தல்

3) குள்ளமான பயிராக இருத்தல்

4) பூச்சி தொல்லைகளுக்குஈடுகொடுக்க முடியாதிருத்தல்

5) அதிக மழைக்கு ஈடு கொடுத்தல்

**33.** உலகில் மத்திய கிழக்கு நாடுகளின் கனியநெய் உற்பத்தி வீதம் எவ்வளவு?

1) 60% 2) 40% 3) 55% 4) 50% 5) 58%

**34.** இலங்கையில் மோட்டார் வாகன உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனம்?

1) நிசான் 2) Honda 3) ஹீண்டாய்

4) மைக்ரோ 5) வோல்ஸ்வேகன்

**35.** கிறீன் பனானா (Green banana) நகர வலயம் காணப்படுவது?

1) மத்தியதரைக்கடல் 2) வடமேல் பிரித்தானியா

3) மத்திய ஐரோப்பா 4) மத்திய ஆசியா

5) வட அமெரிக்கா

**36.** 2050 களில் உலகின் நகராக்க வீதம் யாது?

1)66.4% 2) 55% 3) 56 % 4) 47.1% 5) 73%

**37.** உலகில் நிலக்கரி எற்றுமதியில் ஈடுபடும் இரண்டு பிரதான நாடுகள்?

1) அவுஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா

2) ரஷ்யா மற்றும் சீனா

3) சீனா மற்றும் தென் ஆபிரிக்கா

4) போலந்து மற்றும் வியட்னாம்

5) கனடா மற்றும் அவுஸ்திரேலியா

**38.** பிஸ்பேக் கைத்தொழில் வலயம் எதனை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1) சுப்பீரியர் ஏரிப்போக்குவரத்து 2) அப்பலாச்சியன் நிலக்கரிவயல் 3) அரச கொள்கை

4) தனியார் முறைமையினால் 5) தரைவழி போக்குவரத்து

**39.** கனிய எண்ணெய் உற்பத்தியில் ஈடபட்டுள்ள தென் அமெரிக்க நாடு?

1)பிறேசில் 2) பேரு 3) வெனிசுவெலா 4) ஆர்ஜென்ரீனா 5) பொலிவியா

**40.** ஐரோப்பிய ஒன்றிய தலையலுவலகம் அமைந்துள்ள இடம்?

1) டோக்கியோ 2) ரோம் 3) சூரிச் 4) பிரேஸல்ஸ் 5) ஜெனீவா


(40 புள்ளிகள்)

M.SUJINTHAN

# பகுதி - II

**1. அறிவுறுத்தல்கள் :-** வினா இல **1,2** இனை கட்டாயமாகவும், ஏனைய வினாக்களிலிருந்து இருவினாக்களிற்கும் விடை தருக.

இலங்கை நில அளவைத் திணைக்கத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 என்னும் அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளிகள் 20 மீற்றர்களாகும். இப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடைதருக



(i) படத்தில் 1,2,3,4,5 எனக் குறிப்பிட்டுள்ள அம்சங்களை பெயரிடுக (2 புள்ளிகள்)

(ii) படத்தில் BC கோடுகளினால் குறிதத்துக்காட்டப்படும் நிலவுருவ அம்சத்தினைக் குறித்துப் பெயரிடுக (2 புள்ளிகள்)

(iii)படத்தில் A எனும் நாற்பக்கலினை 1:25000 என்ற அளவுத்திட்டத்திற்கமைய வரைக (2 புள்ளிகள்)

(iv)அப்பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புக் கோல அமைப்பினை சுருக்கமாக விளக்குக (3 புள்ளிகள்)

(v) படத்தில் A எனும் நாற்சதுரப்பரப்பில் காணப்படும் பண்பாட்டு அம்சங்கள் ஐந்தினைக்குறிப்பிடுக (3 புள்ளிகள்)

(vi)இப்பிரதேசத்தில் காணப்படும் இடவியலுக்கும் போக்குவரத்து வலையமைப்பக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்க? (4 புள்ளிகள்)

(vii) இப்பிரதேசத்தில் காணப்படும் பகுதியின் நிலப்பயன்பாட்டு இயல்பினை விபரிக்குக (4 புள்ளிகள்)

**2. அரசியல் எல்லைகளைக் காட்டும் உலகப் படமொன்று உமக்குத் தரப்பட்டுள்ளது பொருத்தமான குறியீடுகள் மற்றும் நிறங்களைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றை குறித்துப் பெயரிடுக**

(i) அபிசீனியன் மலைத்தொடர்

(ii) பேர்மிங்காம்

(iii)குறோசிவா நீரோட்டம்

(iv)கார்பன்ரேரிய விரிகுடா

(v) சைபீரியன் சமவெளி


(vi)2020 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நகரம்

(vii) இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச சங்கத்தின் (IUCN) தலமையகம் காணப்படும் நகரம்

(viii) டொரியன் சூறாவளியினால் அதிக் பாதிப்படைந்த நாடு

(ix)இவ் வருடம் அதிகம் காட்டுத்தீயினால் பாதிப்படைந்த அவுஸ்திரேலிய மாநிலம் யாது

(x) 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற உச்சிமாநாடு நடைபெற்ற நாடு யாது



***3.***

(i) தரவு சேகரிப்பு என்றால் என்ன? *(2 புள்ளிகள்)*

(ii) இரண்டாம் நிலைத் தரவு (Secondary Data) என்றால் என்ன? நீர் அறிந்த இரண்டாம் நிலைத்தரவு பெறும் மூலகங்களிற்கு உதாரணங்கள் சில தருக? *(4 புள்ளிகள்)*

(iii)தரவு அட்டவணைப்படுத்தலின் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக? *(4 புள்ளிகள்)*

(iv)மாதிரி எடுப்பு முறைகளின் வகைகள் சில தருக? *(5 புள்ளிகள்)*

***4.***

(i) இடவிளக்கப் படமொன்றில் காணப்படும் அடிப்படை அம்சங்களினைக் குறிப்பிடுக *(2 புள்ளிகள்)*

(ii) பெரிய அளவுத்திட்டப் படத்துக்கும் சிறிய அளவுத்திட்டப் படத்திற்குமான வேறுபாட்டைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*

(iii)கருப்பொருள் படம் என்றால் என்ன என்பதனைக் குறிப்பிட்டு அவற்றின் பயன்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக? *(5 புள்ளிகள்)*

(iv)தேசப்படத்தின் பயன்பாடுகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக? *(6 புள்ளிகள்)*

***5. படசாலை ஒன்றின் க.பொ.த உயர்தர 2019 மாணவர்கள் புவியியல் பாடத்தில் பெற்ற பள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன***

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30 | 60 | 50 | 48 | 50 | 70 | 56 | 55 | 65 | 70 |
| 41 | 82 | 55 | 75 | 42 | 35 | 38 | 40 | 48 | 56 |
| 82 | 41 | 50 | 75 | 56 | 65 | 64 | 41 | 52 | 55 |

(i) இப்பரம்பலிற்கான மீடிறன் அட்டவணை ஒன்றினை தயாரிக்குக *(3 புள்ளிகள்)*
( வகுப்புக்களின் எண்ணிக்கை - 6)

(ii) இதற்கான இழைவரையம், மீடிறன் பல்கோணி என்பவற்றை வரைக *(6 புள்ளிகள்)*

(iii)இத்தரவிற்கான இடை, திரட்டு மீடிறன் என்பவற்றைக் காண்க? *(6 புள்ளிகள்)*

***6.***

(i) புவியியல் தகவல் முறைமையின் தரவு மூலகங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக *(2 புள்ளிகள்)*

(ii) இடம்சார் தரவுகளிற்கும் இடம்சாராத் தரவுகளிற்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டினைத்** தருக? *(2 புள்ளிகள்)*

(iii) புவியியல் தகவல் முறைமையின் பயன்பாடுகள் நான்கினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக *(2 புள்ளிகள்)*

(iv) நவீன படவரைகலையின் அண்மைக்கால விருத்தியில் இனங்காணக்கூடிய முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக? *(6 புள்ளிகள்)*

M.SUJINTHAN

# "GEO" Published

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2020**

**General Certificate of Education (Adv. Level) Examination – 2020**

| புவியியல் - II<br>Geography - II | பௌதிகப் புவியியல் | மூன்று மணித்தியாலங்கள்<br>Three Hours |
|---|---|---|

**01.**

(i) உலகில் கடந்த வருடம் மோசமான வளிமாசடைதலுக்கு உட்பட்ட நகரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (2 புள்ளிகள்)

(ii) வளிக்கோளத்தின் பிரதான படைகளையும் குறிப்பிட்டு அவற்றின் இயல்புகள், சேர்க்கைகளின் முனைப்பான அம்சங்களினை விபரிக்குக.? (6 புள்ளிகள்)

(iii)அண்மைக் காலங்களில் உலகில் வளி மாசடைவு அதிகரித்துக் காணப்படுகின்றது இதற்கு காரணமான மானிட காரணிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக.? (6 புள்ளிகள்)

(iv)புவிக் கோளத்தின் நிலைத்திருப்பிற்கு வளிமண்டலத்தின் முக்கியத்துவம் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

**02.**

(i) உலகின் எரிமலை வலயங்களினை உலக புற உருவப்படத்தில் குறித்து பெயரிடுக? (2 புள்ளிகள்)

(ii) எரிமலை தோன்றுவதற்கான காரணங்கள்/ தீர்மானிக்கும் காரணிகளினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (6 புள்ளிகள்)

(iii)எரிமலை செயற்பாட்டால் தோன்றும் புறத்தள்ளல் நிலவுருவங்கள் தலையீட்டு நிலவுருவங்கள் **இவ்விரண்டினையுக்** குறிப்பிட்டு வரைபடங்களின் உதவியுடன் விளக்குக? (6 புள்ளிகள்)

(iv)எரிமலை வெடிப்பினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் **மூன்றினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக? (6 புள்ளிகள்)

**03.**

(i) உலகில் காணப்படும் வெப்பப் பாலைவனங்கள், குளிர் பாலைவனங்கள் **இரண்டினையும்** அவை அமைந்துள்ள கண்டங்களையும் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

(ii) காற்றின் அரித்தல் செயன்முறையால் உருவாகும் நிலவுருவங்கள் **நான்கினைப்** பொருத்தமான விளக்கப்படங்களுடன் விபரிக்குக? (6 புள்ளிகள்)

(iii)பாலைவனப் பகுதிகளில் நீரினால் உருவாகும் நிலவுருவங்கள் **நான்கினைப்** பொருத்தமான விளக்கப்படங்களுடன் விபரிக்குக? (6 புள்ளிகள்)

(iv) உலகில் பாலை பரவுதல் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது இதற்கான காரணங்கள் **மூன்றினைப்** பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலிக்குக? (6 புள்ளிகள்)

**04.**

(i) **இடர்** மற்றும் **அனர்த்தம்** என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளிகள்)

(ii) அண்மைக் காலத்தில் இலங்கை மற்றும் உலகில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் **நான்கினையும்** அவை இடம்பெற்ற மாவட்டங்கள், நாடுகளினையும் தருக. (6 புள்ளிகள்)

(iii)இயற்கை அனரத்தம் ஒன்றினைத் தெரிவு செய்து அனர்த்த முகாமைத்துவ வட்டத்தின்செயன்முறைக்கேற்ப மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைத் தருக(6 புள்ளிகள்)

(iv)வெள்ளப்பெருக்கு இடரினை தோற்றுவிப்பதில் செல்வாகக்ச் செலுத்தும் பௌதிகக் காரணி இரண்டையும், மானிடக்காரணி **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக (6 புள்ளிகள்)



M.SUJINTHAN

## பகுதி II மானிடப் புவியியல்

***05.***

(i) உலகின் குடித்தொகை கூடிய வலயங்கள் **இரண்டினையும்** இனையும் இலங்கையில் சனத்தொகை குறைந்த மாவட்டங்கள் **இரண்டினையும்** குறிப்பிடு (2 புள்ளிகள்)

(ii) இலங்கையில் சனத்தொகை அடர்த்தி வேறுபாட்டில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் பற்றி ஆராய்க? (6 புள்ளிகள்)

(iii) இலங்கையின் சனத்தொகை மீள்பரம்பல் நடவடிக்கைக்காக உம்மால் முன் வைக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றி விளக்குக? (6 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சனத்தொகைப் போக்கினைக் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் நாடு எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி ஆராய்க? (6 புள்ளிகள்)

***06.***

(i) உலகின் நிலக்கரி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

(ii) இன்று உலகில் பெற்றோலிய வர்த்தகத்தில் காணப்படும் முனைப்பான பண்புகள் **மூன்றினைப்** பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) உலகில் சுரங்கக் கைத்தொழிலில் காணப்படும் அண்மைக்கால போக்குகள் **மூன்றினைப்** பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) உலகின் சுரங்கக் கைத்தொழிலில் காணப்படும் பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

***07.***

(i) இலங்கையில் காணப்படும் முக்கிய மீன்பிடிப் பிரதேசங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக (2 புள்ளிகள்)

(ii) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

(iii) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் அண்மைக்கால முக்கியத்துவங்கள் **மூன்றினைக்** விளக்குக? (6 புள்ளிகள்)

(iv) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலில் எதிர்கொண்டுள்ள சவால்களை பரிசீலிக்குக? (6 புள்ளிகள்)

**08.**

(i) இலங்கையில் காணப்படும் சுற்றுலாக் கைத்தொழில் பிரதேசங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக (2 புள்ளிகள்)

(ii) சுற்றுலாக் கைத்தொழிலின் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கத்தினை செலுத்துகின்றன என்பதனைக் குறிப்பிடுக (6 புள்ளிகள்)

(iii) சுற்றுலாக் கைத்தொழில் மூலம் இலங்கை எதிர் கொள்கின்ற சவால்களைக் குறிப்பிட்டு ஆராய்க (6 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சுற்றுலாக் கைத் தொழிலின் அபிவிருத்திக்கு அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்க? (6 புள்ளிகள்)

M.SUJINTHAN